

# FEDERATION OF ALL INDIA REALESTATE ASSOCIATION

No.23/12, Basement, Asian Apartments, 1st Cross Street,
Trustpuram, Kodambakkam, Chennai - 600 024

FAIRA

**Dr. A.HENDRY**
Founder - National President 9962132526/fairadmn@gmail.com www.faira.in FAIRA- Reg.no.484/2012

**FAIRA கடித எண். 016/2024.** **தேதி: 07.03.2024.**

பெறுநர்:

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,
தமிழ்நாடு அரசு, தலைமைச் செயலகம்,
செயின்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

2. மாண்புமிகு தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும்
நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் அவர்கள்,

3. உயர்திரு தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும்
நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் அவர்கள்,

4. உயர்திரு நகர் ஊரமைப்பு (DTCP) இயக்குனர் அவர்கள்,

பெருமதிப்பிற்குரிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எமது பணிவான வணக்கங்கள்..

புதிய வீட்டுமனைகளை அமைப்பதற்கான அணுகு சாலை விதிகளில் பொதுவாக தற்போதுள்ள குறைந்தபட்சம் 7.0 மீட்டர் என்ற அளவினை மாற்றி அமைத்து, எளிமைப்படுத்தி அரசாணை எண். 58/2024 ஆக வெளியிட்டு

சென்னை பெருநகரம் உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகள், அனைத்து நகராட்சிகள் மற்றும் ஒருசில புறநகர் ஊராட்சிகளில் புதிய வீட்டுமனை பிரிவுக்கு அனுமதி பெற அணுகு சாலை அளவு குறைந்தபட்சம் 7.0 மீட்டர் எனவும், பேரூராட்சிகளில் அணுகு சாலையின் அளவு குறைந்தபட்சம் 6.5 மீட்டர் எனவும், கிராம ஊராட்சிகளில் அணுகு சாலையின் அளவு குறைந்தபட்சம் 6.0 மீட்டர் எனவும் தளர்வளித்து அரசாணை வெளியிட்டுள்ள தமிழக அரசுக்கும், தமிழ்நாடு முதல்வருக்கும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர், செயலர், இயக்குனர் உள்ளிட்ட அனைவருக்கும் எமது FAIRA கூட்டமைப்பின் சார்பில் உளமார்ந்த பாராட்டுக்களையும், இதயபூர்வமான வாழ்த்துக்களையும், நெஞ்சார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.




# FEDERATION OF ALL INDIA REALESTATE ASSOCIATION

No.23/12, Basement, Asian Apartments, 1st Cross Street,
Trustpuram, Kodambakkam, Chennai - 600 024

FAIRA

**Dr. A.HENDRY**
Founder - National President

9962132526/fairadmn@gmail.com www.faira.in FAIRA- Reg.no.484/2012


மேலும் தமிழக அரசு தொலைநோக்குப் பார்வையோடு கொண்டு வந்துள்ள இத்திட்டம் கிராமப்புறங்களில் மனைகளை வாங்கிட திட்டமிடும் பொதுமக்களுக்கும், புதிய வீட்டுமனைகளை அபிவிருத்தி செய்யும் அபிவிருத்தியாளர்களுக்கும் பேருதவியாக அமையும்.

அதேபோன்று தமிழகம் முழுவதும் மனை வரன்முறை சட்டத்தின் கீழ் அனுமதி பெறப்பட்டுள்ள வீட்டு மனை பிரிவின் 20 அடி சாலை வழியாக சென்று பின்புறம் அமைந்துள்ள பெரும் நிலங்களையும், நகர்ப்புறங்களில் காலம் காலமாக பயன்பாட்டில் அமைந்துள்ள 20 அடி சாலை வழியாக சென்று பின்புறம் அமைந்துள்ள பெரும் நிலங்களையும் அபிவிருத்தி செய்யும் பொருட்டும், அந்தந்த நகரங்களில் வசிக்கும் பொதுமக்களின் வீட்டு மனை கனவுகள் நினைவாகும் வகையில் ஊராட்சியை போன்று, தொலைநோக்குப் பார்வையோடு நகர்ப்புறங்களிலும் அணுகு சாலையின் அளவு குறைந்தபட்சம் 6.0 மீட்டர் என தளர்வளித்து, மேற்கண்ட அரசாணையில் (G.O.NO.58/2024) திருத்தம் கொண்டு வந்து, (புதிதாக ஏற்படுத்தும் வீட்டுமனை பிரிவுக்கு தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகளின்படி அனுமதித்து) நடைமுறைப்படுத்தி உதவிட வேண்டுமென மேற்கண்ட கூட்டமைப்பின் சார்பில் தங்களை பணிவோடு வேண்டுகிறேன்.

நன்றி!

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,

ஆ.ஹென்றி,
நிறுவனர் - தலைவர்,
**FAIRA.**